

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட, உயர்கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி (தமிழ்வழி) மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து. செங்கல்பட்டு மாவட்டம், எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்தில் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து ATM Cum Debit Card மற்றும் தமிழ் பெருமிதம், உயர் கல்வி & வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகங்கள் அடங்கிய Welcome Kitகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட சமூக நல அலுவலர் சங்கீதா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மாவட்ட கழக துணைச் செயலாளர் து.மூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் உதயா கருணாகரன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், கார்த்திக் தண்டபாணி, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் இளங்கோவன், அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர்.ப.கி.கிள்ளிவளவன், பேராசிரியர்கள், மற்றும் அரசு அலுவலர்கள், மாணவர்கள் உள்ளனர்.



உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஏகனாம்பேட்டை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டியை சட்டமன்ற உறுப்பினர் க சுந்தர் மாணவியருக்கு வழங்கினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் ஒன்றிய குழு துணை தலைவர் பி.சேகர், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி கமலா சண்முகம், ஒன்றிய நிர்வாகிகள் எம்.சண்முகம், ஆர். நரசிம்மன், உள்ளாவூர் எல். ரமேஷ் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பல்லாவரம் தொகுதியில் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில்

# மின் துறை அதிகாரிகள் - மாமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடல் கூட்டம்

### மண்டலக் குழுத் தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை - வே. கருணாநிதி பங்கேற்பு!

சென்னை,ஆக.10-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1,2 மற்றும் 3 ல் உள்ள 35 வார்டுகளின் மின்சார பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வண்ணம் 98 2024 மதியம் 3.00 மணி அளவில் குரோம்பேட்டையில் உள்ள மண்டலம்2 அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையில் சென்னை மின் பகிர்மான வட்டம் தெற்கு 2.இன் மேற்பார்வை பொறியாளர் முரளி முன்னிலையில் மின்துறை அதிகாரிகள் மண்டல தலைவர்கள் மன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மண்டல தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை வே. கருணாநிதி மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் வார்டுகள் உள்ள மின்சார துறை பிரச்சனைகளான அடிக்கடி மின்தடை ஏற்படுதல் மின் பற்றாக்குறை பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுதல் குறைந்த மின்னழுத்து உள்ள பகுதிகளுக்கு மின் மாற்றிகள் அமைத்தல் சரியான நேரத்தில் மின் கணக்கெடுத்தல் மின் ஒயர்களை உரசி செல்லும் மரங்களை வெட்டி பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் மின் பகிர்மான உதவி பொறியாளர் அலுவலகங்களில் 24 மணி நேரம் ஏங்க கூடிய அலைபேசி இணைப்பு உருவாக்குதல் போன்ற பிரச்சனைகளை எடுத்துரைத்தார்கள்.

அதைத்தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கூறும் போது,

முதலமைச்சர் இந்தியாவிலேயே அதிக மின் பகிர்மானம் பயன்படுத்துவது முதல் இடத்தில் இருக்கும் தமிழகத்தில் பல்வேறு முறையில் மின்சார துறையில் உள்ள பிரச்சனைக்கு தீர்வு கண்டு என்று நல்ல முறையில் இந்த துறையை இயக்கிக் கொண்டிருக்கிறார். பொதுமக்கள் சிறிது நேரம் மின்சாரம் இல்லை என்றாலும் மிகவும் வேதனைக்கு உள்ளாகி மாமன்ற உறுப்பினர் மண்டல தலைவர் சட்டமன்ற உறுப்பினர் என அனைவருக்கும் போன் செய்து விடுகிறார்கள்.

எனவே அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் இருந்து வரும் தொலைபேசிகளுக்கு உடனடியாக தீர்வு காண வழிவகை செய்யுமாறு மேலும் மின் மாற்றி மாற்றி அமைத்தல் மின் கம்பங்களை மாற்றி அமைத்தல் போன்ற பணிகளை மனுவாகத தாருங்கள் இங்கே வருகை தந்திருக்கும் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்களுடன் வழங்கி உடனடியாக தீர்வு காண வழி வகை செய்யப்படும் மின் சாரத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் பேசி உதவி பொறியாளர் அலுவலகம் இருக்கும் பணியாளர் பற்றாக்குறைக்கு பிரச்சனைக்கு தீர்வு காணப்படும்.

மிக விரைவில் பல்லாவரம் தொகுதியில் 30 க்கு மேற்பட்ட மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன அவை பயன்பாட்டிற்கு வரும் மேலும் மின்மாற்றிகள் தேவையான அளித்துள்ள கோரிக்கைகளை பரிசீலனை செய்து உடனடியாக மின்மாற்றுவிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மின் பகிர்மான மேற்பார்வை பொறியாளர் மூலம் ஒரு வாட்ஸ் அப் குரூப் உருவாகி அதன் மூலம் புகார்கள் வந்தால் தீர்வு காணவும் வழிவகை செய்யப்படும் என சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கூட்டத்தில் கோரிக்கை மற்றும் புகார் அளித்தவர்களிடம் பதில் அளித்து சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் மின்சாரத்துறை சேர்ந்த மண்டல பொறியாளர், கோட்ட பொறியாளர், உதவி பொறியாளர்கள், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், மாநகராட்சி உதவி பொறியாளர் ,பல்லாவரம், குரோம்பேட்டை, பம்மல், அனகாபுத்தூர், திருநீர்மலை, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள், உதவி பொறியாளர்கள், புனித தோமையார் மலை ஒன்றியம், பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’ உறுப்பினர் சேர்க்கை!

### படப்பை ஆ.மனோகரன் - கோல்ட் பிரகாஷ் பங்கேற்பு! ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.10-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் இலந்தோறும் இளைஞர் அணியில் புதியதாக இளைஞர் அணி உறுப்பினர்களை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றி புதிய உறுப்பினர்களை சேர்க்க உள்ளார்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், காஞ்சிபுரம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், குன்றத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றிய துணை தலைவர் திருமதி உமா மகேஸ்வரி வந்தேமாதரம், பொதுக் குழு உறுப்பினர் கே.எத்திராஜ், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன். ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எஸ்.சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ். கே.துளசிங்கம், மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் தி.க. பாஸ்கரன், டி. எஸ்.எம்.ஜெயகரன், டி. ஆர்.சாரதி பெரியநாயகம், ப. குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், எஸ்.ஜனார்த்தனன், எம்.ஆர்.நவீன்ராஜ், வெ.கவிபாரதி, கு.பிரவீன்குமார், கு.தமிழ்வாணன், ஆர்.பிரபு, வெ.வசந்தகுமார், பா.மகேஸ்வரன், ரா.ஹரி பாபு, து.நாராயணன், காமாட்சிபாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதா சத்திய பிரியா, ஜெமிலா பாண்டுரங்கன், லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ், கே.தங்கராஜ், மு.க.பழனி, பொன்.ராஜாபாதர், பெ.கோவிந்தன், மா.கஜேந்திரன், ஆர்.கருப்பசாமி, ஆர்.ஜெயராமன், ப.தீபக்குமரன், பா.அஸ்வின்குமார், ஏ.சதீஷ்குமார், ம.முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையில் இன்று (10.8.2024) காலை 9 மணியளவில் அய்யப்பன்தாங்கலில் நடைபெற உள்ள நிகழ்ச்சிக்கு கழக நிர்வாகிகள் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணியினர் பெரும் அளவில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மும்பை தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு அஞ்சலி தென் மும்பையில் கல்பாதேவி ரோட்டில் அமைந்துள்ள உதயசூரியன் தேனீர் வளாகத்தில் மும்பை தி.மு.க. மாநில முன்னாள் இளைஞரணி அமைப்பாளரும் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர்,தலைவருமான ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது. கருப்பு சிவப்பில் அலங்கரிக்கப் பட்ட கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து பூக்கள் தூவி மரியாதை செய்யப் பட்டது இந்நிகழ்வில் மும்பை திமுகவின் மூத்த தலைவர் பாந்திரா க.மு.மாணிக்கம், ஜவேரிபஜார் பகுதி செயலாளர் வே.ரவிச்சந்திரன், அவைத்தலைவர் அ.அலெக்சாண்டர், கொலாபா பகுதி செயலாளர் அப்துல் திவான் மைதீன்,ஒர்லி பகுதி செயலாளர் இரா.காந்தி போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

### ‘ஹஜ்’ பயணம் மேற்கொள்பவர்களுக்கு

# சேவை வழங்க உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 10 -

ஹஜ் யாத்ரீகர்களுக்கு உதவிட ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த ஹஜ் யாத்ரீகர்களுக்கு உரிய உதவிகள் சேவைகளை வழங்குவதற்கு உதவி மையங்களுக்கு வசதிகள் செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

அவ்வாறு இருப்பின் அதன் விவரங்கள்? வெளிநாடுகளுக்கு குறிப்பாக அரபு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் செய்யும் பெருமளவிலான மக்களுக்காக ஒன்றிய அரசு ஏதேனும் விசேட கடவுச்சீட்டு மற்றும் தூதரக சேவைகளை ஆரம்பித்துள்ளதா? அதன் விபரம் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சிறுபான்மையினர் விவகார அமைச்சர் கிரன் ரிஜிஜு எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

ஹஜ் தொடர்பான செயல்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் அதிகரித்து வருவதால் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளவர்கள் உட்பட இந்தியா முழுவதும் உள்ள ஹஜ் யாத்ரீகர்களுக்கு ஏராளமான சேவைகள் டிஜிட்டல் முறையில் ஆன்லைனில் வழங்கப்படுகின்றன.

ஹஜ் விண்ணப்பங்களை ஆன்லைனில் தாக்கல் செய்தல் எஸ்எம்எஸ்/ஹஜ் கமிட்டி ஆஃப் இந்தியா இணையதளம் மூலம் நிகழ் நேர தகவல்களைப் பரப்புதல், சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக யாத்ரீகர்களின் மருத்துவப் பதிவுகளை ஆன்லைனில் புதுப்பித்தல் மற்றும் ஹஜ் சுவிதா செயலி குறை தீர்க்கும் ஒரு வசதியான ஊடகம். யாத்ரீகர்கள் பயிற்சி உள்ளடக்கம் தங்குமிடம் தொடர்பான விவரங்கள் விமானம் சாமான்கள் ஆகியவை அடங்கும்.

செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இந்திய ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஹஜ் யாத்ரீகர்களுக்கு அதிக எளிதாகவும் வசதிக்காகவும் வழிவகுத்தன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஹஜ் யாத்ரீகர்களுக்கும் பயிற்சி அளிக்க இந்திய ஹஜ் கமிட்டியால் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஹஜ் 2024க்காக வேலூரில் 248 ஹஜ் யாத்ரீகர்களுக்கு 23.04.2024 அன்று பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பிரத்யேக ஹெல்ப்லைன் போன்ற கூடுதல் வசதி சேவைகளும் இந்திய ஹஜ் கமிட்டியால் செயல்படுத்தப்படுகின்றன. இது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து வரும் ஹஜ் யாத்ரீகர்கள் உட்பட அனைத்து இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்கும் அணுகக்கூடிய வகையில் உள்ளது.

வெளிநாட்டில் உள்ள இந்தியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு என்பது அரசாங்கத்தின் மிக உயர்ந்த முன்னுரிமை யாகும். வெளிநாடுகளில் உள்ள நமது பிரஜைகளின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வலுவான நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள்/பதவிகள் இந்தியர்கள் எழுப்பும் எந்தவொரு பிரச்சினைக்கும் முன்னுரிமை அடிப்படையில் பதிலளிக்கின்றன. அழைப்புகள் வாக்இன்கள் மின்ன ஞ்சல்கள் சமூக ஊடகங்கள் 24x7 ஹெல்ப்லைன்கள் MADAD போர்ட்டல் போன்ற பல்வேறு சேனல்கள் மூலம் குறைகள் பதிலளிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு புகார்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் நடத்தும் அரசாங்கத்திடமும் எடுத்துக் கொள்ளப்படும். இருக்கும் தேவையான நடவடிக்கைக்கு. எங்களின் பணிகளும் பதவிகளும் விழிப்பு டன் இருப்பதோடு இந்தியர்களின் நலனை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன. ஏதேனும் அசம்பாவித சம்பவம் நடந்தால் அந்த சம்பவம் முறையாக விசா ரிக்கப்பட்டு உரிய முறையில் தீர்வு காணப்படுவதை உறுதிசெய்ய புரவலன் நாட்டின் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாக எடுத்துச் செல்லப்படுகிறது. மேலும் அவசரகால அல்லது நெருக்கடியான சூழ்நிலைகளின் போது வெளிநாடுகளில் உள்ள எங்கள் பணிகளானது.

தூதரக உதவி உணவு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் துன்பப்படும் / சிக்கித் தவிக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு தீவிரமாக உதவிடவும் தங்குமிடம் மருந்து மற்றும் இந்தியாவிற்கு திரும்பிச் செல்ல வழிவகை செய்கிறது.

ஹஜ் யாத்ரீகர்களுக்கு வசதியாக இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சுற்றறிக்கையை வெளியிடுகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து பாஸ்போர்ட் வழங்கும் அதிகாரிகளும் (PIAs) இதர அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

வருங்கால ஹஜ் யாத்ரீகர்களிடமிருந்து பெறப்பட்ட பாஸ்போர்ட் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் வருங்கால ஹஜ் விண்ணப்பதா ரர்களுக்கு பல்வேறு வழிகளில் தேவையான உதவிகளை வழங்குவது இதில் அடங்கும்.

அதாவது தேவைக்கேற்ப ஒரு நோடல் அதிகாரியை நியமித்தல் வசதிகளைத் திறப்பது உட்பட கவுண்டர்கள் அத்தகைய ஹஜ் விண்ணப்பதா ரர்களுக்கான சந்திப்பு இடங்களை முன்பதிவு செய்தல் மற்றும் கலந்து கொள்வது அத்தகைய குடிமக்களிட மிருந்து உடனடியாக பெறப்பட்ட கோரிக்கைகள்/குறை மனுக்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆலந்தூர் தெற்கு - 167 வது வார்டில் - இன்று

# முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடுத் திட்ட முகாம்!

### மண்டலக் குழு தலைவர் என்.சந்திரன் - துர்கா தேவி நடராஜன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஆக.10-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வார்டு சார்பாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடுத் திட்டம் இன்று 10.8.2024 சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நங்கநல்லூர் 100 அடி ரோட்டில் மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. குறு-சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆலோசனையில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி, அறிவுறுத்தலின்படி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 12வது மண்டலக்குழு தலைவரும் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என்.சந்திரன் நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார். நிகழ்ச்சியில் 167 வது வார்டு நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. பொதுமக்கள் நேரில் வரும்போது பழைய குடும்ப அட்டை ஸ்மார்ட் கார்டு (புதிய குடும்ப அட்டை) ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்களை கொண்டு வரவும் ஆதார் கார்டு ஒரிஜினலும் கொண்டு வரவும்.



தாம்பரம் தொகுதி உட்பட்ட தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 5 வது மண்டலம் 48 வது வார்டில் கிழக்கு தாம்பரம் மிசிரிமல் புக்ராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து சிறப்புரை ஆற்றி 213 பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார் இந்த விழாவில் தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சசிகலா கார்த்திக், ரமணி ஆதிமூலம், பள்ளி தலைமை ஆசிரியர் ஈஸ்வரி மற்றும் கழக நிர்வாகிகள் கி.வேலுமணி, வி. கார்த்திக், சீனிவாசனகுமார், ஏ.நசீர், டி.வி.முருகன், குட்டி என்ற தினேஷ், லோகேஷ்குமார், திவாகர் சிவசுப்பிரமணியம், கே.பிரபாகரன், எல்.எம்.சக்தி, எம்.பிரபாகரன், காந்திநகர் குட்டி, கமலா ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டின் நிதியின் கீழ் 32 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் புதிய வகுப்பறை கட்டுவதற்கு பூமி பூஜையை எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.